## ஸ்ரீ ராஜ ராஜன் சி.பி.எஸ்.இ. பள்ளி, அமராவதிபுதூர், காரைக்குடி

அமெரிக்காவில் உள்ள நாசா செல்ல தேர்வாகியுள்ள ஸ்ரீ ராஜ ராஜன் சி.பி.எஸ்.இ. பள்ளி மாணவி மெய்யம்மை பதினோராம் வகுப்பு படித்து வருகிறார்.

கடந்த 2023 ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்ள குறள் கூடல் செம்மொழி அறக்கட்டளை சார்பில், சயின்ஸ் எக்ஸ்போ - 2023 நடத்தப்பட்டது. இதில் தமிழகத்திலிருந்து 20 பள்ளிகள் கலந்து கொண்டன. இதில் 116 சயின்ஸ் ப்ராஜெக்ட் இடம்பெற்றது. இதில் ராஜ ராஜன் சிபிஎஸ்இ பள்ளி மாணவி M.மெய்யம்மையின் ஹியூமன் ஆட்டோமேஷன் கண்ட்ரோல் ரோபோட் என்ற ப்ராஜெக்ட் முதல் இடம் பிடித்தது. அமெரிக்காவில் உள்ள குறள் கூடல் அறக்கட்டளை, முதல் இடம் பிடித்த பதினோராம் வகுப்பு மாணவி மெய்யம்மைக்கு இலவசமாக நாசா(அமெரிக்கா) செல்லும் வாய்ப்பை அளித்தனர். நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்தில் ஒரு வார கால (Internship) பயிற்சி பெறவும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

நாசா இன்டர்ன்ஷிப் பயிற்சியில் உள்ள மாணவி தன்னுடைய அனுபவங்களை பற்றி கூறுகையில், இந்த நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் மிகவும் பிரமிக்கும் வகையில் உள்ளது. அறிவியலைப் பற்றி கற்றுக்கொள்ள பல வாய்ப்புகள் உள்ளது. இந்த நாசா இன்டர்ன்ஷிப் வாய்ப்பு என்னுடைய வாழ்க்கையில் முன்னேறி செல்வதற்கு பெரும் உதவியாக உள்ளது. இந்த நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் மூன்று பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

1. Space centre Houston
2. Johnson space centre for visitors
3. Smithsonian affiliated museum

நான் இன்டர்ன்ஷிப்க்கு சென்ற நாசா ஸ்பேஸ் ரிசர்ச் மையத்தின் தலைவர் திரு.ஜீவா அவர்கள் என்னை வரவேற்று அழைத்துச் சென்றார். இங்குதான் மிஷன் கண்ட்ரோல் மையம் உள்ளது.

முதலில் நான் பார்த்தது, Gate way to space research centre, Rocket park, Orion capsule, shuttles and space crafts production, Apollo 11, Apollo 13, Mission control

centre, NASA Astronaut training centre, இப்போது நடந்து கொண்டிருக்கும் expedition 71 ஆய்வில் வலந்து கொள்ளும் அரிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது.

இன்டர்ன்ஷிப் பயிற்சி மிகவும் பயனள்ளதாக இருந்தது. எனக்கு பெரிதும் ஊக்கம் தரும் வகையில் இருந்தது. விண்வெளியை பற்றி ஆய்வுகள் மற்றும் அறிவியலைப் பற்றி பல பயிற்சிகள் எனக்கு நாசாவில் வழங்கப்பட்டது. நாசாவில் உள்ள விஞ்ஞானிகளுடன் இருந்து இன்டர்ன்ஷிப் மேற்கொள்வதற்கான வாய்ப்பைத் தந்த, எங்கள் ஸ்ரீ ராஜ ராஜன் சிபிஎஸ்இ பள்ளிக்கும், மற்றும் அமெரிக்காவில் உள்ள செம்மொழி அறக்கட்டளைக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.